<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்</u>

<u>முன்னிலை திரு.பொ. மகாராஜன், எம்.எல்.,</u>

<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி,</u>

<u>2025ம் வருடம் அக்டோபர் திங்கள் 15நாள் புதன்கிழமை</u>

<u>இடைநிலை மனு எண்.4/2024 இன்</u>

<u>அசல் வழக்கு எண்.377/2013</u>

--------

1. P. ஜெய்சங்கர்.
2. A.P. அங்கமுத்து ....மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. சோலை என்ற மாடம்மாள்.
2. K. ராமு.
3. கௌரிசங்கர்.
4. ராஜ்குமார்.
5. மீனாட்சிசுந்தரம். ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக கடந்த 24.09.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. C. சுப்பிரமணி அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. G. ராமபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. நடராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், மனு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் பரிசீலனைக்காக என் முன்பு இருந்து வந்ததுமான இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

மனுதாரர் தரப்பில் இந்த மனுவானது வா.சா.ஆ.6 கிரைய இரசீது மற்றும் வா.சா.ஆ.4 பொது அதிகார பத்திரம் ஆகியவற்றை மதுரை வட்டார தடயவியல் துறை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெறக்

கேட்டு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26, விதி 10(A)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. மனுவின் சுருக்கம்:–

1.1) இந்த மனுதாரர் அசல் வழக்கின் 1ம் வாதி ஆவார். இந்த மனுவானது 1ம் பிரதிவாதி மனுதாரருக்கு தாவா 1வது அயிட்ட சொத்தைப் பொறுத்து 22.11.1995ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட ஜெனரல் பவர் பத்திரம் எழுதிக் கொடுத்து அதே தேதியில் தாவா சொத்திற்குரிய மார்க்கெட் நிலவரப்படி, கிரையத் தொகை ரூ.1,61,500/– பெற்றுக் கொண்டு கிரைய இரசீது எழுதிக் கொடுத்தும் பிராது சொத்திற்குரிய அசல் ஆவணங்களை மனுதாரர் வசம் ஒப்படைத்து சுவாதீனத்தையும், ஒப்படைத்துவிட்டார். இந்த நிலையில் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியுடன் கூட்டு சதி செய்த 22.11.1995ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட ஜெனரல் பவர் பத்திரத்தை ரத்து செய்து மோசடியாக பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தியுள்ளார்கள். மேலும், 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி பெயருக்கு பதிவு செய்யப்பட்ட பவர் பத்திரம் எழுதிக் கொடுத்து அதனடிப்படையில் தாவா 1வது அயிட்ட சொத்தை 3ஆக பிரித்து 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு மோசடியாக பெயரளவில் கிரையப் பத்திரங்கள் பதிவு செய்து கொண்டார்கள். மனுதாரருக்கு எழுதிக் கொடுத்த 22.11.1995ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட ஜெனரல் பவர் பத்திரத்தை ரத்து செய்தது செல்லாது என விளம்புகை செய்யக் கேட்டும், அதன் தொடர்ச்சியாக எழுதிக் கொடுத்த மோசடியான பத்திரங்கள் சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்யக் கேட்டும், இதர பரிகாரங்கள் கேட்டும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு இதர சாட்சிகள் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது.

1.2) பிரதிவாதிகள் எனக்கு எழுதிக் கொடுத்த 22.11.1995ம் தேதியிட்ட ஜெனரல் பவர் பத்திரத்தையும், தாவா சொத்திற்குரிய அசல் ஆவணங்களை என் வசம் ஒப்படைத்ததையும், தாவா சொத்தின் சுவாதீனத்தை என் வசம் ஒப்படைத்து கிரையத் தொகை ரூ.1,61,500/–பெறவில்லை என்றும்,

அதற்காக கிரைய இரசீது எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்றும், எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு தாவா செய்து வருகின்றனர். கிரைய இரசீதில் சாட்சி கையொப்பங்கள் செய்திருந்த அக்கினி மற்றும் இராமசாமி ஆகியோர்கள் அந்த காலக் கட்டத்தில் உயிருடன் இருந்தனர். அதனால், வழக்கு விசாரணையின்போது, மேற்படி, நபர்களை சாட்சிகளாக விசாரணை செய்து வா.சா.ஆ.6 ஆவணத்தின் உண்மைத்தன்மையை நிரூபணம் செய்துவிடலாம் என்று நம்பிக்கையில் மனுதாரர் இருந்துவிட்டார். ஆனால், தற்போது வா.சா.ஆ.6 கிரைய இரசீதில் சாட்சிக் கையொப்பம் செய்த இரு நபர்களும் காலமாகிவிட்ட நிலையில், வா.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, வா.சா.ஆ.6 கிரைய இரசீதை மனுதாரரும், 2ம் வாதியும் சேர்ந்து வழக்கிற்காக உற்பத்தி செய்ததாக கேள்விகள் கேட்டுள்ளனர். மனுதாரர் தரப்பு வாதத்தை நிரூபிக்க வா.சா.ஆ.6 மிகவும் முக்கியமான ஆவணம் ஆகும். எனவே, வா.சா.ஆ.6 ஆவணத்தின் உண்மைத் தன்மையை நிரூபணம் செய்ய கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெற மனுதாரர் தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என சட்ட சிக்கல் வந்துவிடக் கூடாது என வா.சா.ஆ.6 ஆவணம் மற்றும் வா.சா.ஆ.4 ஆவணம் ஆகியவற்றை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெறக் கேட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**<u>2. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>**

2.1) இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்கள் அல்ல. எனவே, இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். பிரதிவாதிகள் தரப்பில் 2014ம் வருடம் ஏப்ரல் மாதம் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில், வா.சா.ஆ.6 கிரைய இரசீது குறித்து தெளிவாக மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், உடனடியாக கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில் வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டு

வா.சா.1 சாட்சியம் முடிவடைந்த பின்பு கிரைய இரசீது பிரதிவாதியால் மறுக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவானது கால தாமதம் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

3. மனுதாரர் மனு, எதிருரை ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**4. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் தாக்கல் செய்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.**

ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, அசல் வழக்கானது வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக 2013ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு O.S.No.377/2013–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. அதன்பின்னிட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில், 13.06.2014ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்பின்பு 05.06.2018ம் தேதி இந்த வழக்கில் எழுவினா வனையப்பட்டுள்ளது. அதன்பின்பு, 25.04.2023ம் தேதி 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 22.09.2023ம் தேதி இந்த வழக்கில் கூடுதல் எழுவினா வனையப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. 07.11.2023ம் தேதி வா.சா.1 சாட்சியம் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 24.11.2023ம் தேதி வா.சா.1 பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். 18.12.2023ம் தேதி வா.சா.1 குறுக்கு விசாரணையானது 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் முடிக்கப்பட்டுள்ளது. 01.02.2024ம் தேதி வா.சா.1யைப் பொறுத்து 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் தனியாக குறுக்கு விசாரணை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னிட்டு இந்த வழக்கானது வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக 20.02.2024, 06.03.2024, 20.03.2024, 26.03.2024 ஆகிய தேதிகளில் ஒத்தி வைக்கப்பட்டது. அதன்பின்பு 05.04.2024ம் தேதி மனுதாரர் தரப்பில் இந்த மனுவானது தாக்கல்

செய்யப்பட்டுள்ளது.

5. இந்த மனுவில் மனுதாரர் தரப்பில், வா.சா.ஆ.6 கிரைய இரசீதில் உள்ள 1ம் பிரதிவாதியின் கையெழுத்தையும், வா.சா.ஆ.4 ஒப்புக் கொள்ளப்பட்ட ஜெனரல் பவர் பத்திரத்தில் உள்ள 1ம் பிரதிவாதியின் கையெழுத்தையும், கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெற வேண்டும் என்றும், அதற்கு காரணமாக வா.சா.1 குறுக்கு விசாரணையின்போது, வா.சா.ஆ.6 கிரைய இரசீதை 1ம் வாதியும், 2ம் வாதியும் சேர்ந்து வழக்கிற்காக உற்பத்தி செய்துவிட்டார்கள் என்று கேட்கப்பட்டுள்ளது என்றும், எனவே, வா.சா.ஆ.6ல் உள்ள கையெழுத்தை நிரூபிக்கும் வகைக்காக கையெழுத்து நிபுணருக்கு வாதி தரப்பில் அனுப்புவதற்கு எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என சட்ட சிக்கல் வந்துவிடக் கூடாது என்பதற்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் 13.06.2014ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு கிரைய இரசீது குறித்து பிரதிவாதி தரப்பில் குறிப்பாக கீழ்க்கண்டவாறு மறுக்கப்பட்டுள்ளது. “But this defendant never received any amount much less Rs. 1, 61,500/- as entire sale consideration for the suit property in lieu of the said power of attorney and that she never executed any receipt in favour of the 1st plaintiff as alleged by them. In fact, the plaintiffs did not pay any amount to this defendant as alleged.”

7. அதாவது, வா.சா.ஆ.6 கிரைய இரசீதை 13.06.2014ம் தேதியிலேயே வெளிப்படையாக மறுக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் சுமார் 10 ஆண்டுகள் கழித்து 05.11.2024ம் தேதி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேலும், இந்த மனுவில் வா.சா.ஆ.6ல் உள்ள கையெழுத்தை நிரூபிக்கும் வகைக்காக கையெழுத்து நிபுணருக்கு வாதி தரப்பில் அனுப்புவதற்கு எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என

சட்ட சிக்கல் வந்துவிடக் கூடாது என்பதற்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. சட்ட சிக்கல் வந்துவிடக் கூடாது என்பதற்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர் தரப்பில் தெரிவித்துள்ளபட்சத்தில் 13.06.2014ம் தேதி எதிர்வழக்குரையில் பிரதிவாதி தரப்பில் கிரைய இரசீது குறித்து வெளிப்படையாக மறுப்பு தெரிவித்துள்ளபட்சத்தில் சுமார் 10 ஆண்டுகளுக்கு பின்பு காலதாமதமாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டதற்கான விளக்கம் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

9. மேலே கண்டவற்றின் அடிப்படையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது, மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள காரணம் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் இல்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரரின் மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2025 ஆண்டு அக்டோபர் திங்கள் 15ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

/ஒப்பம்/
(திரு. P. மகாராஜன்,M.L)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் – இல்லை.</u>
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் – இல்லை.</u>

/ஒப்பம்/
(திரு. P. மகாராஜன்,M.L)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
மேலூர்
இடைநிலை மனு எண்.4/2024
இன்
அசல் வழக்கு எண்.377/2013
சீரான/வரைவு உத்தரவு
நாள் 15.10.2025

I.A.No.4/2024 in O.S.No.377/2013.